# வடக்கு - கிழக்கு மக்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்து

வடக்கு - கிழக்கு மக்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும், என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகத்துக்கு மட்டும் நல்லிணக்கம் தொடர்பாக எடுத்துக்கூறாமல், நாட்டிலும் அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், இவ்வருடத்தின் பெப்ரவரி மாதத்திற்குள் வடக்கு கிழக்கில் காணப்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என கடந்த வருடம் ஜனாதிபதி தெரிவித்திருந்தமையும் அவர் நினைவூட்டினார்.

வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களும் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களும், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (04)




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 21 வியாழக்கிழமை 07.12.2023 கதிர் 129



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## பாலஸ்தீன விவகாரத்திலும் வெளிப்படையான நிலைப்பாடு ஜனாதிபதி எடுக்க வேண்டும் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

உக்ரைன் விவகாரத்தில் உடனடியாகச் செயற்பட்டதைப் போன்று பாலஸ்தீன விவகாரத்திலும் வெளிப்படையான மற்றும் தெளிவான நிலைப்பாட்டை ஜனாதிபதி எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய அக்கட்சியின் நாடளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இனப்படுகொலையை உடனடியாக நிறுத்தவும் நிபந்தனையற்ற போர்நிறுத்தத்திற்கு உடனடியாக செல்ல வேண்டும் என்றும் ஜனாதிபதி



வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இரண்டு மாதங்களாக இஸ்ரேலிய விமானப்படை பாலஸ்தீனத்தில் குண்டு வீசி வருவதையும் வடக்கில் 2➤

## மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன

கொழும்பு, டிசெ. 07

சுமார் 900 மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு ஊழியர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது கூறினார்.

இந்த முறைமையின் மூலம் 100 மில்லியன் டொலர்களுக்கு மேலாக வெளிநாட்டு ஊழியர்களால் பணம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த வெளிநாட்டு ஊழியர்களுக்கு வழங்கப்படும் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்யும் முறைக்கான கடன் கடிதங்களை விநியோகிப்பதில் சில நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திறைசேரி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளினால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (04)

## பேஸ்புக்கில் பெண்ணின் நிர்வாணப் படத்தை பதிவிட்ட நபருக்கு இரு வருட கடூழியச் சிறை

பெண்ணின் நிர்வாணப் புகைப்படத்தை பேஸ்புக்கில் கணக்கில் பதிவிட்ட குற்றச்சாட்டின் பெயரில் சந்தேக நபருக்கு அக்கரைப்பற்று நீதிவான் இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணால் இலங்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டுக்கு அமைவாக அந்தச் சந்தேகநபரைக் கைது செய்து அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைகளின் போது குற்றத்தை ஏற்றுக்கொண்ட சந்தேக நபருக்கு இன்று இரண்டு வருட கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அக்கரைப்பற்று நீதிவான் எம். எச்.எம். ஹம்சா இந்தத் தண்டனையை விதித்தார். (அ)

## 11 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய பாலம் கிளிநொச்சி - பாரதிபுரத்தில் உடைந்து வீழுந்தது

### இருவர் படுகாயம் - மக்கள் அச்சத்தில்!



புதிதாக அமைக்கபட்ட பாலம் ஒன்று உடைந்து விழுந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் சிகிக்சை பெற்று வருகின்றனர். குறித்த சம்பவம் இன்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் 2➤

## யாழ்ப்பாணத்தில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகிறோம்!

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் உறுதி

அண்மையில் இடம்பெற்ற தெல்லிப்பழைத் தாக்குதல் சம்பவம் போன்று இனி யாழ் மாவட்டத்தில் எந்தவொரு சம்பவமும் நடைபெற நாம் அனுமதிக்க மாட்டோம், என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தெல்லிப்பளைத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை 48 மணி நேரத்திற்குள் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரும் ஏனைய பொலிஸ் பிரிவினரும் இணைந்து கைது செய்துள்ளனர். அவர்கள் பயணித்த வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என கருதப்படுவோர் பொலிஸாரால் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றார்கள்.

சில குழுவினரிடையே இருந்து வரும் பகைமையின் காரணமாகவே தற்போதைய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக, தெல்லிப்பழைச் சம்பவம் கூட ஏற்கனவே இரு குழுக்களுக்கிடேயே உள்ள 2➤

## வடிவேல் சுரேஷ்க்கு புதிய பதவி!



மலையகத் தமிழர்களை இலங்கைச் சமூகத்துடன் முழுமையாக இணைத்துக்கொள்வது தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமனம் பெற்றுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை அமைப்பாளர் பதவியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நீக்கப்பட்ட நிலையில் இந்தப் புதிய பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. 2➤

# சட்டக் கல்லூரி மாணவர்களின் வசதிகளுக்கு இடமொன்றை வழங்க ஜனாதிபதி நடவடிக்கை

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கத்துக்கு சொந்தமான இடமொன்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற கட்டிடத்தொகுதியில் நேற்று நடை பெற்ற சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், சட்டக் கல் லூரியின் வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசியமான திட்டத்தை விரைவில் தயாரிக்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணி ஒன்றை சட்ட கல்லூரிக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உறுதியளித்தார்.

அதன் முதற் கட்டமாக 40 பேர்சஸ் காணியை ஒதுக்குமாறும், திட்டத்துக்கு அவசியமான மேலதிக இடப்பரப்பை நீதி அமைச்சுடன் கலந்தாலோசித்த பின்னர் பெற்றுக்கொடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

150 வருடங்கள் பூர்த்தியாகும் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ஒரு துண்டு காணி கூட கிடைக்கவில்லை என்பதால், ஜனாதிபதி இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளமைக்காக சட்டக்கல்லூரி அதிபர் நன்றி தெரிவித்தார்.

## துரத்தித் துரத்தி வாள்வெட்டு சகோதரர்கள் இருவர் காயம்

### வவுனியாவில் நேற்றிரவு பயங்கரம்

வவுனியா, ஓயார்சின்னக்குளம் பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாய மடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓயார்சின்னக்குளம் பகுதிக்கு இரவு வாகனம் ஒன்றில் மதுபோதையில் சென்ற குழுவினர் அங்கு நின்ற இருவர் மீது துரத்தித் துரத்தி வாளால் வெட்டினர்.

இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதலை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதற்கமைய வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## 50 வீதமான ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன!

மின்சாரம், நீர்க் கட்டணம், இறைச்சி, மீன், அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக இலங்கையில் இதுவரை 50 வீதமான ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டுள்ளன என அகில இலங்கை ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்க தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல், உணவக உரிமையாளர்கள், ஹோட்டல் ஊழியர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் என 40 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர் எனவும் அவர்கள் மிகவும் ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரெந-04)

## சாரணர் முகாம் இன்று முதல் திங்கள் வரை

கொழும்பு சாரணர்களின் வருடாந்த பிரதான முகாம் கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசு தலைமையில் இன்று (07) ஆரம்பமாகி டிசம்பர் 11 ஆம் திகதி வரை கொழும்பு விஹார மஹாதேவி பூங்காவில் நடைபெறுகின்றது. கொழும்பு மாவட்ட ஆணையாளர் அமில் அபே சுந்தர தலைமையில் நடைபெறுகின்ற மேற்படி 58 ஆவது கொழும்பு மாவட்ட ஜம்போரியில் சுமார் 10,000 சாரணர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படு கின்றது. (ரெந-05)

# அரச நிறுவனங்களுக்கான வழிகாட்டுதல்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

அரச நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டுதல்கள் விரைவில் வெளியிடப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ், சிறைச்சாலை மற்றும் நன்னடத்தை நிலையங்கள் போன்ற நிறுவனங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் அதன் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஒருவர் கைது செய்யப்பட்ட பிறகு எப்படி செயல்பட வேண்டும், மனநலம் குன்றியவரை அனுமதிக்கும் போது அவருக்கு அளிக்கப்படும் பராமரிப்பு மற்றும் சிகிச்சை போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

டிசெம்பர் 10ஆம் திகதியன்று சர்வதேச மனித உரிமைகள் தினமானம் நினைவுகூரப்படும் நிலையில் டிசம்பர் 11ஆம் திகதி இந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என எதிர்பார்ப்பதாக நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

## வடிவேல் சுரேஷுக்கு புதிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது அதற்கு ஆதரவாக வாக்களித்தமைக்காக எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தது. (04)

## யாழ்ப்பாணத்தில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பாட்டிற்கு பழி தீர்க்கும் விதமாகவே இடம் பெற்றுள்ளது.

அதேபோன்று, யாழ்ப்பாண மாவட்டத்தில் கூலிக்கு அமர்த்தி வன்முறைகளில் ஈடுத்துவதையும் இனியும் அனுமதிக்க மாட்டோம். அவ்வாறு யாராவது ஈடுபட்டால் அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம்.

பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது பொலிஸாரின் கடமையாகும். பொதுமக்களுக்குப் பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள்.

பொதுமக்கள் இந்த விடயங்கள் தொடர்பில் அச்சமடைய தேவையில்லை.

சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு யாழ்ப்பாணத்தில் பொலிஸார் தொடர்ச்சியாக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## 11 லட்சம் ரூபா செலவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்தில் உள்ள வீதி ஒன்றில் அமைக்கப்பட்ட பாலமே இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

செபஸ்தியார் வீதி என அழைக்கப்படும் குறித்த வீதி ஊடாக நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் பயணிக்கின்றனர். இரணைமடு பொதுச்சந்தை, பாடசாலை மற்றும் தொழில் உள்ளிட்ட அன்றாட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு குறித்த வீதி இன்றியமையாததாக உள்ளது.

இந்த நிலையில், குறித்த பாலம் 2019 ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபையினால் அமைக்கப்பட்டதுடன், அதன் பாதுகாப்பிற்கான பணிகள் 2022ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பணிக்காக ஏறத்தாழ 11 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். ஆயினும், இன்று அதிகாலை அது உடைந்து விழுந்துள்ளது.

இன்று காலை தொழிலுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பாலம் உடைந்து விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்து உள்ளிட்ட வாகனங்கள் பயணிக்கும் போது இது இடம்பெற்றிருந்தால், பாரிய விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (02)

## பாலஸ்தீன விவகாரத்திலும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பாலஸ்தீனியர்கள் தங்கள் சொந்த கிராமங்களையும் குடியிருப்புகளையும் விட்டு தெற்கே நகர்வதையும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலின் கொடூரமான தாக்குதலில் பாடசாலைகள், மருத்துவமனைகள், குடியிருப்புகள், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் அனைத்தும் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன என்றும் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர் சுட்டிக்காட்டினார். (04)





## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

# சூரிய மின்னுற்பத்தி இலவச வீட்டுத் திட்ட விண்ணப்பம் 14 க்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்

வட மாகாணத்திற்கான, தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இருபத்தையாயிரம் சூரிய மின்னுற்பத்தி இலவச வீட்டுத் திட்டத்திற்குரிய விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை இறுதி கட்டத்தை அடைந்துள்ளது.

இது தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஊடக பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தி குறிப்பில், ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, வடக்கு மாகாணத்தில் ஆளுநரின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள இந்த வீட்டுத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக ஏற்கப்பட்டு வருகிறது.

இதுவரை இந்த வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிக்காத தகுதியுள்ள பயனாளிகள் இருப்பின் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் விண்ணப்பங்களை பிரதேச செயலாளர்கள் ஊடாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலுக்கு அமைய மாவட்ட செயலாளர்களின் வழிகாட்டுதல்களுடன், பிரதேச செயலாலர்களால் வீட்டுத்திட்ட பயனாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களி லும் இந்த வீட்டுத்திட்டத்திற்கு இதுவரை விண்ணப் பிக்காத, தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் இருப்பின், உடனடியாக தங்களின் பிரதேச செயலகத்தின் ஊடாக விண்ணப்பங்களை சமர்பிக்க முடியும்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஏற்கனவே வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு, அது நிறைவு செய்யப்படாதவர்களும், மீள்குடியேற்றத்தின் பின்னர் காணி இல்லாமல் போனவர்களும், சொந்தக்காணி இருந்தும் இதுவரை வீட்டுத்திட்டம் கிடைக்காதவர்கள் மற்றும் வீட்டுத் திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு வேறு ஏதேனும் வழியில் தகைமையுடையவர்களும் இந்த விசேட திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த புதிய வீட்டுத்திட்டத்தினூடாக காணி அற்றவர்களுக்கு அரச காணியில் தொகுதி வீடமைப்பு திட்டமும் அமுல்படுத்தப்படவுள்ளது.

710 சதுர அடியில் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்த வீடுகளின் கூரைகளில் ஆயிரம் சதுர அடியில் சூரிய மின் படலங்கள் பொருத்தப்படவுள்ளன. மிகுதியாக எஞ்சும் பகுதிக்கு சீமெந்து தரை இடப்படும்.

வெளிநாட்டு தனியார் முதலீட்டு நிறுவனம் ஒன்றினூடாக செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்படும் இந்த வீடுகளின் கூரைகளில் பொருத்தப்படவுள்ள சூரிய மின்படலத்திலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை இருபது வருடங்களுக்கு மாத்திரம், வீட்டு உரிமையாளர்கள், குறித்த முதலீட்டு நிறுவனத்திற்கு வழங்கவேண்டும்.

எனினும் வீட்டு நிர்மான பணிகளுக்கான கட்டணம் எதுவும் பயனாளிகளிடமிருந்து அறவிடப்படாது.

எனவே, இந்த திட்டத்திற்கு இதுவரை விண்ணப்பங்களை சமர்பிக்காதவர்கள் உடனடியாக பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த விசேட வீட்டுத்திட்டம் தொடர்பாக மேலதிக தகவல்கள் மற்றும் முறைப்பாடுகள் காணப்படுமாயின், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு பின்வரும் முறையில் நேரடியாக அறிவிக்க முடியும்.-

தொலைபேசி இலக்கம் - **021 221 93 70**

மின்னஞ்சல் - **plangov@np.gov.lk**

முகவரி - ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலகம்,பழைய பூங்கா, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

# அட்டாளைச்சேனை கூட்டுறவுச் சங்கத்தை அபிவிருத்தி செய்வது குறித்து ஆராய்வு



அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான என்.மதிவண்ணனினால் நியமிக்கப்பட்ட பணியாளர் சபையின் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இடைக்கால புதிய பணிப்பாளர் சபைக்கு தலைவராக நியமிக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.ரீ.ஆதம்பாவா தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

பணிப்பாள் சபை உறுப்பினர்களான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம்.நியாஸ், சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் சங்கத்தின் செயலாளரும், பொது முகாமையாளருமான எஸ்.எல். அல்.முனவ்வர்,சங்கத்திற்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.முஹம்மட் பௌஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் சங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும், சங்கம் நீண்டகாலமாக எதிர்நோக்கும் பிடிச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

மேலும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் அரசியல் பிரமுகர்களை சந்தித்து குறைபாடுகளை முன்வைத்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

# இயற்கை முறையிலான பயிர்ச் செய்கை ஆரம்பக் கூட்டம் எருவிலில் இடம்பெற்றது



மட்டக்களப்பு மாவட்டம் - மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கான இயற்கை முறையிலான பயிர்ச்செய்கை உருவாக்குவதற்கான ஆரம்ப கட்டக் கூட்டம் நேற்றைய தினம் எருவில் தெற்கு கிராமசேவையாளர் பல்தேவை கட்டிடத்தில் இடம் பெற்றது.

இதில் கற்பகவனம் இயற்கை விவசாயம் பண்ணையின் உத்தியோகத்தர்களும் அம்கோர் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் திரு. யோ. சிவயோகராஜன் மற்றும் கள உத்தியோகத்தர்களும் எருவில் தெற்கு கிராம சேவையாளரும் கலந்துகொண்டனர்.

# கிண்ணியா பஸ் டிப்போவுக்கான எரிபொருள் நிரப்பும் நிலையம்

(கே எ ஹமீட்)


கிண்ணியா பஸ் டிப்போவில் எரிபொருள் நிரப்பும் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை கடந்த காலத்தில் எடுக்கப்பட்டு நாட்டின் பொருளாதார பிரச்சினை காரணமாக அதனை நிர்மாணிக்க முடியாமல் போய்விட்டது.

மீண்டும் அதனைத் தொடங்குவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் திரு. அல்விஸ் அவர்களை இன்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் சந்தித்தார். அவர் விடுத்த வேண்டுகோளையடுத்து வருகிற ஜனவரி மாதத்திற்குப் பிறகு ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.






# இஸ்ரேலுக்கு வருகைதந்த சுற்றுலாவிகளின் எண்ணிக்கை 90 சதவீதம் குறைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிப்பு



வெளிநாட்டில் இருந்து இஸ்ரேலுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 90 சதவீதம் குறைந்துள்ளது என இஸ்ரேலின் மத்திய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காஸாவில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16,248 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும் குழந்தைகளும் ஆவர்.

இது தவிர, இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 43,000 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். 7,600 க்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், நவம்பர் மாதத்தில் வெளிநாட்டில் இருந்து இஸ்ரேலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 90 சதவீதம் குறைந்துள்ளது என இஸ்ரேலின் மத்திய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காஸா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் கடந்த சில வாரங்களாக நடத்திவரும் தாக்குதல் காரணமாக, நவம்பரில் இஸ்ரேலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 90 சதவீதம் குறைந்துள்ளது.

நவம்பர் மாதத்தில் இஸ்ரேலுக்கு 39,000 சுற்றுலாப் பயணிகளின் வருகை தந்துள்ளதாகவும், இது 2022 நவம்பரில் 3,69,800 ஆக இருந்தது. இவர்களில் 42.1 சதவீதம் பேர் அமெரிக்காவிலிருந்து வந்தவர்கள்.

இதற்கிடையில், இஸ்ரேலின் மத்திய புள்ளியியல் அலுவலகம் நவம்பர் 2023 இல் வெளிநாடுகளுக்குச் சென்ற இஸ்ரேலியர்களின் தரவுகளை வெளியிட்டுள்ளது. அதில், நவம்பர் 2022 முதல் வெளிநாடுகளுக்குச் சென்ற இஸ்ரேலியர்களின் எண்ணிக்கையில் 75 சதவீதத்திற்கும் அதிகமான அளவில் குறைந்துள்ளமை தெரியவந்துள்ளது. (04)

## இம்ரான் கானுக்கு எதிரான பரிசுப் பொருள் வழக்கு மனுவை இஸ்லாமாபாத் நீதிமன்றம் நிராகரித்தது



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான பரிசுப் பொருள் வழக்கில் அவரது பிடிஐ கட்சி தாக்கல் செய்திருந்த மனுவை இஸ்லாமாபாத் நீதிமன்றம் புதன்கிழமை நிராகரித்தது.

பிரதமராக இருந்தபோது, தனக்கு பரிசுப் பொருளாக வழங்கப்பட்ட பொருள்களை அரசு கருவூலத்திலிருந்து குறைந்த விலைக்கு வாங்கியதை தேர்தல் ஆணையத்திடம் மறைத்ததாகக் கூறி, இம்ரான் கானை ஆணையம் தகுதி நீக்கம் செய்துள்ளது. இதனால் அவர் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை உள்ளது.

இந்த வழக்கில் இம்ரான் கான் கடந்த ஒகஸ்ட் 5 முதல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், தகுதி நீக்கத்தை எதிர்த்து இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான தீர்ப்பை அந்த நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது. அதையடுத்து, இது தொடர்பாக லாகூர் நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்வதற்கு வசதியாக, இஸ்லாமாபாத் நீதிமன்றத்திலுள்ள மனுவை ரத்துச் செய்ய வேண்டுமென்று பிடிஐ கட்சி கோரிக்கை விடுத்திருந்தது. அந்தக் கோரிக்கையே தற்போது நிராகரிக்கப்பட்டுள்ளது. (04)

## ஆஸ்ப்ரே வி–22 வகை விமானங்களின் பயன்பாட்டை நிறுத்துவதாக அமெரிக்க விமானப் படை அறிவிப்பு

ஆஸ்ப்ரே வி-22 வகை விமானங்களின் பயன்பாட்டை நிறுத்துவதாக அமெரிக்க விமானப் படை தெரிவித்துள்ளது.

முன்னதாக அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான 'ஆஸ்ப்ரே' ரக விமானமொன்று 8 பேருடன் ஜப்பான் அருகே கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது.

அதைத் தொடர்ந்து, அந்த வகை விமானங்கள் இயக்கப்படுவதை நிறுத்திவைக்க ஜப்பான் உத்தரவிட்டுள்ளது.

தற்போது அமெரிக்காவும் விபத்துக்கான காரணம் குறித்து அறியும்வரை ஆஸ்ப்ரே விமாங்களின் பயன்பாட்டை நிறுத்தி வைக்க முடிவெடுத்துள்ளது. முதற்கட்ட விசாரணையில் இயந்திரக் கோளாறுதான் விபத்துக்கான காரணம் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஹெலிகாப்டர்களைப் போல் செங்குத்தாக புறப்படவும், தரையிறங்கவும் கூடிய 'ஆஸ்ப்ரே' ரக விமானங்கள், சாதாரண விமானங்களைப் போல் புரொப்பல்களின் உதவியுடன் பறக்கக்கூடியவை.

இந்த வகை விமானங்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்ட மிகக் குறுகிய காலத்தில் பல்வேறு விபத்துகள் ஏற்பட்டுள்ளன.



அமெரிக்க விமானப் படையிடம் 51 ஆஸ்ப்ரே விமானங்களும் கப்பற்படையிடம் 400 விமானங்களும் உள்ளன. தற்காலிக இந்த விமானத்தின் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த விசாரணையின் தரவுகள் குறித்து தங்களிடமும் பகிர்ந்து கொள்ளுமாறு அமெரிக்காவிடம் ஜப்பான் கோரிக்கை வைத்துள்ளது. (04)

## தெலங்கானா முதல்வரானார் ரேவந்த் ரெட்டி இந்தியப் பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவிப்பு

தெலங்கானா முதல்வராக பதவியேற்றுள்ள ரேவந்த் ரெட்டிக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற காங்கிரஸ், ரேவந்த் ரெட்டி தலைமையில் இன்று ஆட்சி அமைத்தது.

முதல்வராக ரேவந்த் ரெட்டி, துணை முதல்வராக மல்லு பாட்டி விக்ரமார்கா மற்றும் 9 அமைச்சர்களுக்கு மாநில ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிலையில், தெலங்கானா முதல்வராக பதவியேற்றுள்ள ரேவந்த் ரெட்டிக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும், மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் மக்களின் நலனுக்காக என்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் தருவேன் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த பதவியேற்பு விழாவில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, கர்நாடக முதல்வர் சித்தராமையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (04)

## ஹமாஸ் தலைவரைப் பிடிக்கப்போவது உறுதியாம்! இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிக்கை

ஹமாஸ் அமைப்பின் தலைவர் யாஹ்யா சின்வாரைப் பிடிக்கப்போவது உறுதி என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார். நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், ஹமாஸ் தலைவர் இருப்பதாக நம்பப்படும் காஸாவின் தெற்குப் பகுதிகளைச் சுற்றி இஸ்ரேலின் படை வளைத்து விட்டதாகத் தெரிவித்திருக்கிறார். தற்போது அவர்கள் சின்வாரின் வீட்டைச் சுற்றி வளைத்திருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். அங்கிருந்து அவர் எளிதாகத் தப்பி ஓடி விடுவார் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் விரைவில் அவரைப் பிடிக்கப்போவது உறுதி, எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

# கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவத் தலைவிகளுக்கான சின்னம் சூட்டல்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவிகளுக்கான பதவிப் பிரமாணமும் சின்னம் சூட்டும் நிகழ்வும் கல்லூரி அதிபர் எம்.எச். மும்தாஸ் பேகம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக பேராசிரியர் பரீனா றுஸைக் மற்றும் மேல்மாகாணக் கல்வி பிரதிப் பணிப்பாளர் டபிள்யூ.எச்.ஆர். சில்வா ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவிகளான வைத்தியர் ஷில்மியா ஷரீஃப், சட்டத்தரணி நுஷ்ரா ஸறூக், எழுத்தாளர், அறிவிப்பாளர் பாத்திமா ஸிம்ரா அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கணக்கீட்டு முகாமைத்துவத்திற்கான சிறப்பு விருது ஏறாவூர் நகரசபைக்கு




(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பொதுநிதி கணக்காளர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கணக்கீட்டு முகாமைத்துவத்தை சிறப்பாக அறிக்கையிடுதல் சம்பந்தமான போட்டியில் ஏறாவூர் நகரசபைக்கு சிறப்பு விருது கிடைத்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் அசோக்க ரஞ்சித்திடமிருந்து ஏறாவூர் நகரசபையின் சார்பாக சிறப்பு விருதினை அதன் செயலாளரும் விசேட ஆணையாளருமான எம்.எச்.எம்.ஹமீம், கணக்காளர் புஸ்ரா நுஸைர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# கவிநிலை போட்டியும் இரண்டாம் தவணை பெறுபேற்றுக்கான பரிசளிப்பு நிகழ்வும்



(நூருல் ஹுதா உமர்)

பாடசாலை வகுப்பறைகளை மாணவர்களுக்கு உகந்த கற்றல் - கற்பித்தல் சூழலை உயிரோட்டம் உள்ளதாகவும், மகிழ்ச்சிகரமானதாகவும் மாற்றி அமைப்பதற்கு கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் முன்னெடுக்கப்படுகின்ற பகுதி வாரியான வகுப்பறை மட்ட போட்டி நிகழ்ச்சிகளின் ஒரு கட்டமாக தரம் 11 மாணவர்களின் வகுப்பறை மட்ட போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்தது.

இந்நிகழ்வானது கல்லூரியின் முதல்வர் எம்.ஐ. ஜாபீர் அவர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்ப தரம் 11 இன் பகுதி தலைவர்களான ரீ.கே.எம். சாக்கீர் மற்றும் ஏ.எம். அப்றாஜ் றிழா ஆகியோரது வழிகாட்டுதலுடன் தமது பிரிவின் அனைத்து வகுப்பறைகளிலும் உள்ளக மற்றும் வெளிச்சூழல்களை வகுப்பு ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனும், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரதும் பூரண ஒத்துழைப்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தது.

இந்நிகழ்வில் கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளர் யூ. எல். றியால் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, கல்லூரியின் அதிபர் எம். ஐ. ஜாபீர், பிரதி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க நிறைவேற்றுக்குழு செயலாளர் டாக்டர் கே. எம். ஏ. சனூஸ் காரியப்பர் மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் டாக்டர் எம். என். எம். தில்ஸான் ஆகியோர் வகுப்பறைப் போட்டிகளின் புள்ளி கணிப்பீடுகளுக்கான நடுவர்களாக கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்த உயிரோட்டமான, முன்மாதிரியான செயற்பாடுகளுக்காக உழைத்த பகுதி தலைவர்கள், வகுப்பு ஆசிரியர்கள், பாட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

# கல்முனையின் சுகாதார சேவைகள் பணிப்பாளராக சாய்ந்தமருது டாக்டர் சக்கீலா இஸ்ஸதீன் நியமனம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சாய்ந்தமருதைச் சேர்ந்த டொக்டர் சக்கீலா இஸ்ஸதீன் கடமையேற்க உள்ளார்.

இவர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையேற்க உள்ள முதலாவது பெண் அதிகாரியாவார். மருத்துவத் துறையில் 35 வருட சேவைக் காலத்தை கொண்ட இவர் சாய்ந்தமருதின் முதலாவது பெண் மருத்துவ கலாநிதியும், மருத்துவ நிர்வாகத்துறையில் முதலாவது முஸ்லிம் பெண் நிர்வாக உத்தியோகத்தருமாகும்.

சாய்ந்தமருது முன்னாள் மரண விசாரணை அதிகாரி மர்ஹூம் ராசிக் காரியப்பரின் புதல்வியும், ஓய்வுபெற்ற பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஏ. இஸ்ஸதீன் அவர்களின் மனைவியும் ஆவார்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் நிந்தவூர் தள வைத்தியசாலை ஆகியவற்றில் கடமையாற்றி நிறுவனம் சார்பான போட்டிகளில் பங்கு பற்றி தேசிய மற்றும் மாகாணத்தில் பல வெற்றிகளைப் பெற்றவர் .

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியாக கடமை புரிந்த காலத்தில் சுகாதார துறையில் அதிகளவிலான விருதுகளை பெறுவதற்கு காரணமாக அமைந்த இவர் கல்முனை கார்மல் பாத்திமாக் கல்லூரியின் பழைய மாணவியுமாவார்.



# பல்கலைக்கழகங்களை தெரிவுசெய்யும்போது மாணவர்களுக்கு போதுமான வழிகாட்டலில்லை!

(ம.அருள்குமரனின் முகநூல் பதிவிலிருந்து)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மாணவர்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை என்ற செய்தியைப் பலரும் கொண்டு காவும் இந்த நேரத்தில் எனக்குக் கிடைத்த இரண்டு தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1. யாழ்ப்பாணத்தின் முன்னணி கிறிஸ்தவப் பாடசாலை ஒன்றில் இருந்து கடந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 3ஏ சித்திகளைப் பெற்ற மாணவன் ஒருவர் இம்முறை பல்கலைக்கழக அனுமதியின் போது இலங்கையிலுள்ள எந்தவொரு பல்கலைக்கழகத்துக்கும் தெரிவு செய்யப்படவில்லை. காரணம் பல்கலைக்கழக அனுமதிக்காக அவர் விண்ணப்பித்த நேரத்தில் பொருத்தமான விருப்பதெரிவின் அடிப்படையில் அவரது விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படவில்லை.

அவர் தனது விண்ணப்பத்தில் 4 பல்கலைக்கழகங்களை மட்டுமே தெரிவுசெய்திருந்த காரணத்தினால், அவரது விருப்பத் தெரிவுகளுக்குரிய பல்கலைக்கழகங்களின் வெட்டுப்புள்ளியைப் பெற்றிராத காரணத்தினால் அவர் விண்ணப்பித்த பல்கலைக்கழகங்களில் எந்தவொரு பல்கலைக்கழகத்துக்கும் அவர் தெரிவு செய்யப்படவில்லை.

2. முல்லைத்தீவைச் சேர்ந்த மாணவி ஒருவர் மிகத் திறமையாகச் சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்படத் தேவையான தகைமைகளைக் கொண்டிருந்தும், முதல் விண்ணப்பத்தின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தை விருப்பத் தெரிவு ஒழுங்கில் தெரிவு செய்யாததன் காரணமாக அவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற முடியாத நிலை.

முல்லைத்தீவில் இருக்கின்றவர் தனது விருப்பத் தெரிவாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்த பின்னர் தற்போது, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கற்பதற்கு விரும்புகிறார். ஆனால் தனது விருப்பத் தெரிவுகளில் ஒன்றாக யாழ்ப்பாணத்தைத் தெரிவு செய்யாததன் காரணமாக மாணவர் இடமாற்றத்தைப் பெற முடியவில்லை.

மிகவும் மனவேதனைக்குரிய விடயமாக இதனைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய தேவை. மேற்சொன்ன இரண்டு உதாரணங்கள் நம் காதுகளுக்கு எட்டியவை. இவற்றை விட, இவ்வாறான பல மாணவர்களின் கதைகள் வெளியில் தெரிவதில்லை.

பெறுபேறுகள் வெளியான காலப் பகுதியில் மாணவர்களுக்குப் போதிய வழிகாட்டலின்மையே இதற்கான பிரதான காரணமாகும்.

ஒரு மாணவன் பல்கலைக்கழக அனுமதிக்காகத் தனது முதல் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது, அவரது சுட்டெண் முதல் தரவு உள்ளீடாக வழங்கப்படுகிறது.

அதன் அடிப்படையில், அவர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடத்துறை, பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட இசற் புள்ளி ஆகியவற்றின் படி, அவருக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் அனைத்தையும் (கிட்டத்தட்ட 35 தெரிவுகளுக்கு மேல்) அவர் விருப்பத் தெரிவாக வழங்கக் கூடிய வாய்ப்பைப் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு வழங்குகிறது. பொறுமையாக அவற்றைப் புரிந்து கொண்டு அனைத்து இயலுமையுள்ள கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிப்பதன் மூலம், மேலே உதாரணமாகச் சொல்லப்பட்ட சம்பவங்களைப் போன்று நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

சரி, நடந்தது நடந்து விட்டது இதற்குத் தீர்வு இல்லையா? என்று கேட்டால் உண்டு என்றே சொல்ல வேண்டும். பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக் கழக அனுமதிக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்-துக்கும் - ஒவ்வொரு கற்கை நெறிக்கும் அனுமதிக்கப் படக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்ட தினத்தில் (இம்முறை 01.02.2023) இருந்து 30 நாட்களுக்குள் தமது மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க முடியும்.

ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதிக்கான முதல் விண்ணப்ப முடிவுத் திகதி முடிவடைந்த பின்னரும், தமது விருப்பத் தெரிவுகளை மாற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, வெட்டுப் புள்ளி வெளியாகிய பின்னரும் அனுமதி கிடைக்காமல் போன அல்லது விருப்பத்தெரிவைச் சமர்ப்பிக்கத் தவறியவர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கிய பின்னரே அனுமதிகளை இற்றைப்படுத்துகிறது.

எனவே, கல்வியாண்டு 2022-2023 க்கான பல்கலைக்கழக அனுமதியின் போது திருப்தியீனங்கள் ஏதாவது இருப்பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அனுமதிக் கையேட்டின் 10 ஆவது பகுதியில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1 - மேன்முறையீட்டு விண்ணப்பத்தை நிரப்பி அனுப்புவதன் மூலம் தவறவிடப்பட்ட அனுமதிக்கான வாய்ப்பை மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

அனுமதிக் கையேட்டை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

எனவே வாய்ப்புக்களைத் தவற விட்டுத் தவித்து நிற்கும் மாணவர்களுக்கு மிகச் சரியான வழிகளைக் காட்ட வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும், சுற்றத்தாருக்கும் உண்டு.






# பொத்துவிலில் முஸ்லிம் காங்கிரஸ் புனரமைப்பு

(கே எ ஹமீட்)

பொத்துவில் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகள் புனரமைப்புத் தொடர்பாக பொத்துவில் அரசியல் அதி உயர் பீட உறுப்பினர்கள், மத்திய குழு மற்றும் கட்சி முக்கியஸ்தர்களுடனான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் பொத்துவிலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி யின் பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலாளரும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சி.சமால்டீன், பொத்துவில் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும் பொத்துவில் பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான எம்.எஸ்.வாஸித், மத்திய குழு தலைவரும் அரசியல் அதி உயர் பீட உறுப்பினருமான சட்டத்தரணி சீ.எம்.பைசல், அரசியல் அதி உயர் பீட உறுப்பினரும் பொத்துவில் பிரதேச சபை முன்னாள் பிரதி தவிசாளருமான ஏ.பத்துர் கான், ஓய்வு பெற்ற அதிபர் கமர்தீன் மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# கற்பிட்டி சுற்றுலா விடுதியில் புதையல் தோண்டியோர் கைது

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டியிலிருந்து கண்டக்குளி கடற்கரையை நோக்கி தேத்தாவாடி ஊடாக செல்லும் வீதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான சுற்றுலா விடுதியில் புதையல் தோண்டப்படுவதாக கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த விடுதியை சுற்றிவளைத்து அங்கு இருந்த 9 பேர் கைது செய்து செய்யப்பட்டதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சுற்றுலா விடுதியின் உரிமையாளர் உட்பட அங்கு பணிபுரியும் ஊழியர்கள் உள்ளடங்களாக 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மண்வெட்டி, கோடரி உள்ளிட்ட இரும்புப் பொருட்களும் பூசைக்கு பயன்படுத்தப்பட்ட இன்னும் சில பொருட்களும் இதன்போது பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் கற்பிட்டி மற்றும் தும்மலசூரிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.12.2023இல் வெளியிடப்பெற்றது.